# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 3-1 - இருந்தண் மாநிலம்
# (திருவயிந்திரபுரம்)

1148 * இருந்தண் மாநிலம் ஏனமதாய் * வளை மருப்பினில் அகத்து ஒடுக்கி[1] *
கருந்தண் மாகடல் கண் துயின்றவனிடம் * கமல நன்மலர்த் தேறல்
அருந்தி ** இன்னிசை முரன்றெழும் அளிகுலம் பொதுளி * அம் பொழில் - ஊடே *
செருந்தி நாண்மலர் சென்று அணைந்து உழிதரு * திருவயிந்திரபுரமே 1

1149 மின்னும் ஆழி அங்கை அவன் * செய்யவள் உறை தரு திருமார்பன் *
பன்னு நான்மறைப் பல்பொருள் ஆகிய * பரனிடம் வரைச் சாரல் **
பின்னும் மாதவிப் பந்தலில் பெடை வரப் * பிணி அவிழ் கமலத்து *
தென்னவென்று வண்டு இன்னிசை முரல்தரு * திருவயிந்திரபுரமே 2

1150 வையம் ஏழும் உண்டு ஆலிலை வைகிய * மாயவன் அடியவர்க்கு *
மெய்யனாகிய தெய்வ நாயகனிடம் * மெய்தகு வரைச் சாரல் **
மொய்கொள் மாதவி செண்பகம் முயங்கிய * முல்லையங் கொடி ஆட *
செய்ய தாமரைச் செழும்பணை திகழ்தரு * திருவயிந்திரபுரமே 3

1151 மாறு கொண்டு உடன்றெதிர்ந்த வல்லவுணன் தன் * மார்பகம் இருபிளவா *
கூறு கொண்டு அவன் குல மகற்கு * இன்னருள் கொடுத்தவனிடம் ** - மிடைந்து
சாறு கொண்ட மென்கரும்பு இளங்கழை * தகை விசும்புற மணி நீழல் *
சேறு கொண்ட தண் பழனமது எழில் திகழ் * திருவயிந்திரபுரமே 4

1152 ஆங்கு மாவலி வேள்வியில் இரந்து சென்று * அகலிடம் அளந்து * ஆயர்
பூங்கொடிக்கு இன விடை பொருதவனிடம் * பொன்மலர் திகழ் ** வேங்கை
கோங்கு செண்பகக் கொம்பினில் * குதிகொடு குரக்கினம் இரைத்தோடி *
தேன் கலந்த தண் பலங்கனி நுகர்தரு * திருவயிந்திரபுரமே 5

1153 கூனுலாவிய மடந்தை தன் * கொடுஞ்சொலின் திறத்து இளங்கொடியோடும் *
கானுலாவிய கருமுகில் திருநிறத்தவனிடம் * கவினாரும் **
வானுலாவிய மதி தவழ் மால்வரை * மாமதிள் புடை சூழ *
தேனுலாவிய செழும் பொழில் தழுவிய * திருவயிந்திரபுரமே 6

1154 மின்னின் நுண்ணிடை மடக்கொடி காரணம் * விலங்கலின் மிசை இலங்கை
மன்னன் * நீள்முடி பொடி செய்த மைந்தனதிடம் * மணி வரை நீழல் **
அன்ன மாமலர் அரவிந்தத்து அமளியில் * பெடையொடும் இனிது அமர *
செந்நெலார் கவரிக் குலை வீசு தண் * திருவயிந்திரபுரமே 7

---
[1] அடக்கி

1155 விரை கமழ்ந்த மென்கருங்குழல் காரணம் * வில்லிறுத்து அடல்[2] மழைக்கு *
நிரை கலங்கிட வரை குடை எடுத்தவன் * நிலவிய இடம் தடமார் **
வரை வளம் திகழ் மதகரி மருப்பொடு * மலை வளரகில் உந்தி *
திரை கொணர்ந்து அணை செழுநதி வயல் புகு * திருவயிந்திரபுரமே 8

1156 வேல்கொள் கைத்தலத்து அரசர் வெம்போரினில் * விசயனுக்காய் மணித் - தேர் *
கோல்கொள் கைத்தலத்து எந்தை பெம்மானிடம் * குலவு தண் வரைச் – சாரல் **
கால்கொள் கண்கொடிக் கை எழக் * கமுகு இளம்பாளைகள் கமழ் சாரல் *
சேல்கள் பாய் தரு செழுநதி வயல் புகு * திருவயிந்திரபுரமே 9

1157 * மூவராகிய ஒருவனை * மூவுலகு உண்டு உமிழ்ந்து அளந்தானை *
தேவர் தானவர் சென்று சென்றிறைஞ்சத் * தண் திருவயிந்திரபுரத்து **
மேவு சோதியை வேல் வலவன் * கலிகன்றி விரித்து உரைத்த *
பாவு தண் தமிழ் பத்திவை பாடிடப் * பாவங்கள் பயிலாவே 10

**அடிவரவு:** இருந்தண் மின்னும் வையம் மாறு ஆங்கு கூன் மின்னின் விரை வேல் மூவர் ஊன்

[2] அடர்